## நெடுந்தீவு பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 26 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 29 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஆகஸ்ட் 2020 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் நெடுந்தீவு பிரதேச சபையின் நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வருங்காலங்களில் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக்கொள்கைகள் வெளிப்படுத்தப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரித்தளித்தமைக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

#### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சபையின் பயன்பாட்டிலுள்ள 05 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த 05 வாகனங்களுக்கு உரிமைமாற்றம் செய்யப்பட்ட பின்னர் இறுதிக்கணக்குகளில் உள்ளடக்கப்படும் | உரிய வாகனத்தின் பெறுமதியினை மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ii) | பிரதேச சபையின் மத்திய நூலகத்திலுள்ள புத்தகங்களில் 46 புத்தகங்களும் மேற்கு நூலகத்திலுள்ள புத்தகங்களில் 02 புத்தகங்களும் பாவனைக்கு உதவாததும் காலங்கடந்ததும் மற்றும் மிகவும் | அழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்பாட்டில் இல்லாத புத்தகங்களின் பெறுமதி இருப்பு பெறுமதியிலிருந்து நீக்கப்படல் வேண்டும். |

சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் நிதிக்கூற்றுக்களில் இருப்பு பெறுமதி கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

**(இ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியாண்டின் வருமானச்செலவு கணக்கில் வழங்கு பொருட்களும் தேவைப்பொருட்களும் ரூபா 2,659,978 பெறுமதி காட்டப்பட்டிருந்த போதிலும் வருடாந்த செலவு பொழிப்பு அறிக்கையில் ரூபா 4,859,978 பெறுமதியே காட்டப்பட்டிருந்தமை தொடர்பில் ரூபா 2,200,000 வேறுபாடுகள் காணப்படுகின்றன. | நாட்குறிப்பினூடாக சீர்செய்யப்பட்டமையினால் வேறுபாடு காணப்படுகின்றது. | கணக்குகள் இணக்கம் செய்யக்கூடிய வகையில் கொடுக்கல் வாங்கலுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| உப பிரிவு 16(2) | சபையினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டு வருடாந்த செயலாற்றல் அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | உரிய சட்டத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதி | | | |
| நிதி ஒழுங்கு விதி இல 571 | 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கடந்த ஒப்பந்ததாரர் பிடிபணம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2 வருடத்திற்கு மேற்பட்ட வைப்புக்கள் உரியவர்களுக்கு மீளளிக்கப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்கு விதிக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(இ) வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம்

| | | | |
|---|---|---|---|
| 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | சபையின் 08 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | சபையின் 08 வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வு பரிசோதனை இவ் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்று நிருபத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தில் விஞ்சிய வருமானம் ரூபா 99,749 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 42,925 தொகையாக இருந்தது. இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் மீண்டுவரும் செலவீனத்தில் விஞ்சிய வருமானம் ரூபா 56,824 ஆக அதிகரித்துள்ளது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 690,000 | 59,900 | 120,200 | 950,000 | 70,550 | - |
| வாடகைகள் | 1,320,000 | 1,381,750 | - | 1,026,000 | 863250 | 132,149 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 305,000 | 457,898 | - | 117,500 | 189299 | - |
| ஏனைய வருமானம் | 4,374,200 | 5,180,612 | 413,765 | 5,559,400 | 4,782,461 | 765,955 |
| | 6,689,200 | 7,080,160 | 533,965 | 7,652,900 | 5,905,560 | 898,104 |

2.2.2 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கடை வாடகை நிலுவை ரூபா 28,000 இனை அறவிட நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வாடகை நிலுவைகளினை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் குத்தகை நிலுவை ரூபா 92,200 இனை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிலுவை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குத்தகை நிலுவைகளினை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

2.2.3 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஏனைய வருமானங்களின் நிலுவை ரூபா 392,015 பெறுமதியினை அறவிட எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ரூபா 392,015 செலுத்துவதற்கு உரியவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவையினை உரிய காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | சபையின் உபவிதிக்கமைய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### (ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவுகள் தேசிய கொள்கைகளின்படி தரம் பிரிக்காமல் சேகரிக்கப்படுவதுடன் கழிவுகள் கொட்டப்படும் இடங்களில் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவு தரம் பிரித்தல் நிலையம் இதுவரையில் சபையில் அமைக்கப்படவில்லை. | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு ஏற்ப வினைத்திறனாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதி வழியே குப்பைகள் கொட்டி செல்லப்படுகின்றது. | சிறிய அளவிலான கழிவுகளை வீதிகளில் சேகரிக்கப்படுகின்றன. | திண்மக்கழிவுகள் சேகரிப்பின் போது சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (iii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மருத்தவ பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. | உரிய காலத்தில் தொழிலாளர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்த வேண்டும். |

### (இ) சுற்றுச்சுழல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சுற்றுச்சூழலை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 06 மயானங்களில் சபையினால் மயான வரி அறவிடப்பட்டிருக்க நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | உரிய காலத்தில் மயான வரிகள் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்களிற்கு மீள்மதிப்பீடு மேற்கொண்டு ஆதனவரி அறவிட நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மீள்மதிப்பிடப்பட்ட ஆதனங்களின் ஆதன வரியை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 11 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பதவி வெற்றிடங்களை உரியகாலத்தில் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நீர் விநியோக பொருட்கள் அலுவலக களஞ்சியத்திலும் வளாகத்திலும் காணப்படுகின்றது. இவற்றிற்கு பொருத்தமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கெடுப்புச்சபையின் போது ஏல விற்பனை செய்யப்படும். | பொருட்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் பயன்பாட்டில் உள்ள 12 வாகனங்களினை உரிமை மாற்றம் செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சபையானது வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் பாதீட்டு செலவினத்திற்கும் உண்மையான செலவினத்திற்கும் கணிசத்தன்மையில் வேறுபாடு காணப்படுவதனால் இது ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டுகிறது. | 2019 ஆம் ஆண்டுப் பாதீட்டில் வகைமாற்றம் செய்யப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பாதீட்டினை சரியான முறையில் தயாரித்து திட்டமிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |